நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**அரியலூர்: முந்திரி ஆலை தொடங்கப்படுமா?**

First Published : 30 Aug 2011 04:06:12 AM IST

Last Updated : 30 Aug 2011 05:30:26 AM IST



அரியலூர்: அரியலூர் மாவட்டத்தில் முந்திரி விளைச்சல் அதிகம் உள்ள ஆண்டிமடம் அல்லது செந்துறை பகுதியில் முந்திரி தொழிற்சாலை தொடங்க வேண்டும் என இந்தப் பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களில் முந்திரிதான் முதலிடம் வகிக்கிறது.

கடலூர் மாவட்டத்தின் பண்ருட்டி பகுதிக்கு நிகராக, அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத்தில், பொன்பரப்பி, பரணம், வீராக்கன், இரும்புலிக்குறிச்சி, மருதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களிலும், ஆண்டிமடம், கொடுக்கூர், இலையூர், வாரியங்காவல், குவாகம், ஜயங்கொண்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முந்திரி உற்பத்தி அதிக அளவில் உள்ளது. இன்றைய நிலையில் 80 கிலோ முந்திரியுள்ள மூட்டை ரூ.5 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. உள்ளூர் வியாபாரிகள் மட்டுமல்லாது, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பண்ருட்டி, காடாம்பூலியூர் போன்ற பகுதிகளைச் சேர்ந்த முந்திரி வியாபாரிகளும், இந்தப் பகுதிகளுக்கு வந்து முந்திரிக் கொட்டைகளைக் கொள்முதல் செய்கின்றனர்.

இவை இடைத்தரகர்கள் மூலம் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு முழுத் தொகையும் கிடைப்பதில்லை எனக் கூறப்படுகிறது. முந்திரியை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்துக்கு எடுத்துச் சென்றால், பல மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதாகக் கூறும் விவசாயிகள், எதிர்பார்த்த விலைக்கும் விற்க முடிவதில்லை என்கின்றனர்.

இதனால், தங்களின் வீட்டுக்கே வந்து முந்திரியைக் கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடம் குறைந்த லாபம் கிடைத்தாலும் பரவாயில்லை என்று விற்றுவிடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அரசு தொழிற்சாலை வேண்டும்: விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு முந்திரியை வாங்கிச் சென்று, தனியார் வியாபாரிகள் அதிக லாபத்துக்கு விற்று வருகின்றனர்.

எனவே, அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையிலும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும் அரியலூர் மாவட்டத்தில் முந்திரி விளைச்சல் அதிகமுள்ள ஆண்டிமடம் அல்லது செந்துறை பகுதியில் அரசு சார்பில் முந்திரிக் கொட்டையைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை தொடங்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக இந்தப் பகுதி மக்கள் மற்றும் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

அவ்வாறு முந்திரித் தொழிற்சாலை தொடங்கப்பட்டால், இந்தப் பகுதியில் உள்ள படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாவும் வேலைவாய் ப்பு கிடைக்கும்.

இதேபோல, இந்தப் பகுதிகளில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் முந்திரியை முழுவதுமாக கொள்முதல் செய்யலாம். இதனால், விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கவும் வழிபிறக்கும்.

இது ஒருபுறமிருக்க, ஜயங்கொண்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் அனல் மின் திட்டத்துக்காக அரசால் நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, முந்திரி உற்பத்தி நிலங்களும் கையகப்படுத்தப்பட்டன.

குறைந்த விலையில் கையகப்படுத்தப்பட்ட இந்த நிலங்களில் தொடர்ந்து முந்திரி உற்பத்தி மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ள

விவசாயிகள், தங்களது நிலத்துக்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

எனவே, அரியலூர் மாவட்டத்தில் முந்திரி தொழிற்சாலையைத் தொடங்க உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

**சுற்றுச்சூழலை மேம்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு விருதுகள்**

First Published : 30 Aug 2011 03:59:04 AM IST

சென்னை, ஆக.29: சுற்றுச்சூழலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படும் என்று சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னையா அறிவித்தார்.

சட்டப்பேரவையில் சுற்றுச்சூழல் மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து திங்கள்கிழமை அவர் பேசியது:

சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காகப் பாடுபடும் தன்னார்வ அமைப்புகளுக்கு பசுமை விருதுகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. சுற்றுச்சூழலை உயர்த்த நடவடிக்கைகள் எடுத்த மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருதுகளை 2001-லிருந்து மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் வழங்கி வந்தது.

கடந்த 5 ஆண்டுகளாக அந்த விருது வழங்கப்படவில்லை. அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதாலேயே அவை வழங்கப்படாமல் இருந்தன.

அந்த விருதுகளை மாற்றி அமைத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக சிறப்பாகச் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கப்பட உள்ளன. தமிழகத்தை 4 மண்டலங்களாகப் பிரித்து ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 லட்சம் செலவில் ஒவ்வொரு மண்டலத்துக்கும் ஒரு விருது வழங்கப்படும்.

துரித கண்காணிப்புப் படை:

மணலி, கடலூர், ராணிப்பேட்டை, கோவை ஆகிய நான்கு இடங்களில் உள்ள தொழிற்சாலை வளாகங்களைக் கண்காணிக்கவும், தோல் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளைக் கண்காணிக்கவும் இரண்டு புதிய துரித கண்காணிப்புப் படைகள் ஏற்படுத்தப்படும்.

சென்னை மற்றும் கோவையைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் தலைமையில் அவை செயல்படும்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய சட்டப்பிரிவை வலுப்படுத்தும் வகையிலும், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் மற்றும் புதிதாக அமைக்கப்பட உள்ள தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் வழக்குகளை நடத்தவும் சுற்றுச்சூழல் குறித்த விவரங்கள் அறிந்த ஒரு முதுநிலை சட்ட அலுவலரை நியமிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சர் கூறினார்.

**பார்த்தீனியம் களைச்செடிகளை அழிப்பது எப்படி? வேளாண் உதவி இயக்குநர் ஆலோசனை**

First Published : 30 Aug 2011 09:19:20 AM IST

ராசிபுரம், ஆக. 29: பார்த்தீனியம் செடிகளை அழிக்கும் வழிமுறைகள் குறித்து எலச்சிப்பாளையம் வேளாண்மைத்துறை உதவி இயக்குநர் த.லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி: பார்த்தீனியம் களைச்செடியின் விதைகள் சிறியதாகவும், எடை குறைவாகவும் உள்ளன. இவை அதிக எண்ணிக்கையில் உற்பத்தியாகி, விரைவில் பரவும் தன்மை கொண்டது.

செடியில், பூ பூப்பதற்கு முன் கையுறை அணிந்து கொண்டு செடிகளை அழித்துவிட வேண்டும். செடிகள் முளைத்த பின் வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும்.

பயிர் சாகுபடி செய்யும் நிலங்களில் வழக்கமான பயிர் சாகுபடியுடன், துலுக்க சாமந்தி பூச்செடியை மழைக் காலங்களில் சுழற்சி முறையில் சாகுபடி செய்யலாம். கரும்பு, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்யும்போது பார்த்தீனிய களைச் செடிகளை முளைக்காமல் தடுக்க லிட்டருக்கு 4 கிராம் அட்ரசின் மருந்தை கலந்து தெளிக்க வேண்டும்.

பயிர் சாகுபடி இல்லாத இடங்களில் பார்த்தீனிய களைச்செடிகள் முளைத்த பின் லிட்டருக்கு 200 கிராம் சமையல் உப்புடன் 2 மில்லி டீ பால், சோடியம் உப்புடன் 20 கிராம் அமோனியம் சல்பேட், 2 மில்லி சோப்பு கரைசல் கலந்தும் செடிகள் மீது தெளிக்கலாம். 15 மில்லி கிளைபோசேட்டுடன் 20 கிராம் அமோனியம் சல்பேட், 2 மில்லி சோப்பு கரைசல் கொண்டும் அழிக்கலாம்.

**வேளாண் கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் வழங்கக் கோரிக்கை**

First Published : 30 Aug 2011 08:50:08 AM IST

காரியாபட்டி, ஆக. 29: மல்லாங்கிணறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன், விவசாயக் கடன், உரங்கள் வழங்க வேண்டுமென வட்டார விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் மு.பாலாஜிக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து ஆட்சியருக்கு விவசாயிகள் அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:

மல்லாங்கிணறைச் சுற்றியுள்ள வரலொட்டி, நந்திக்குண்டு, மேலதுலுக்கன்குளம் உள்பட சுமார் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு மல்லாங்கிணறு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூலம் ஆண்டுதோறும் பயிர்க் கடன் வழங்குவது வழக்கம்.

இந்த ஆண்டுக்கான பயிர்க் கடன் இதுவரை வழங்கவில்லை. வங்கி அதிகாரிகளின் உறவினர்களுக்கு மட்டும் பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க் கடன் உடனே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதுபற்றி வங்கி அதிகாரியிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:

விவசாயிகளுக்கு வங்கி மூலம் வட்டியில்லா நகைக் கடன் ரூ.10 லட்சம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால் மத்திய கூட்டுறவு வங்கி ரூ.3 லட்சம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. முதலில் வந்த நபர்களுக்கு வங்கி ரூ.3 லட்சம் வழங்கியுள்ளது. மீதி ரூ.7 லட்சத்தை மத்திய கூட்டுறவு வங்கி வழங்கும்போது மற்ற விவசாயிகளுக்கும் நகைக் கடன் வழங்கப்படும்.

வங்கி மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன், உரங்களை வழங்கச் சொல்லி அரசு உத்தரவிட்டும் அதற்கான தொகையை அரசு ஒதுக்கீடு செய்யவில்லை. விரைவில் பயிர்க் கடன், விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கப்படும் என்றார்.

**கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்**

First Published : 29 Aug 2011 11:00:49 AM IST

திருச்சி, ஆக. 28: திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த்தலை அருகேயுள்ள தேவஸ்தானம் கிராமத்தில் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தமிழக முதல்வரின் அறிவுறுத்தலின்படி திருச்சி மாவட்டத்தில் 205 இடங்களில் இந்த முகாம் நடைபெறவுள்ளது. தேவஸ்தானம் கிராமத்தில் நடைபெற்ற முகாமை கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் என்.ஆர். சிவபதி பார்வையிட்டார். மேலும், கால்நடைகளுக்கு குடல் புழு நீக்க மருந்தை வழங்கினார்.

முகாமில் 612 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசியும், 412 கால்நடைகளுக்குக் குடல்புழு நீக்கமும், 2 நாய்களுக்கு கருத்தடை அறுவைச் சிகிச்சையும், 47 கால்நடைகளுக்கு மலடு நீக்க சிகிச்சையும், 13 ஆடுகள், 3 மாடுகளுக்கு ஆண்மை நீக்கமும், 27 பசுக்கள், 3 எருமைகளுக்குச் செயற்கை முறை கருவூட்டல் சிகிச்சையும் அளிக்கப்பட்டன.

முகாமில் மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆர். மனோகரன், டி.பி. பூனாட்சி, டி. இந்திராகாந்தி, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் மு. பரஞ்சோதி, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் பி. ராஜசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பார்த்தீனியம்: பின்னர், தேவஸ்தானம் கிராமத்தில் பார்த்தீனியம் களை செடிகள் அழிக்கும் பணியை அமைச்சர் பார்வையிட்டார்.

அப்போது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) ராமசாமி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பிரதமரைச் சந்திக்க தென்னை விவசாயிகள் தில்லி பயணம்**

First Published : 29 Aug 2011 11:03:27 AM IST

திருவாரூர், ஆக. 28: தில்லியில் நடைபெறவுள்ள தென்னை பொருள்கள் கண்காட்சியில் பங்கேற்கவும், பிரதமரைச் சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்தவும், தமிழகத்திலிருந்து 76 விவசாயிகள் சனிக்கிழமை தில்லிக்கு புறப்பட்டுச் சென்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலரும், அகில இந்திய துணைச் செயலருமான பி.எஸ். மாசிலாமணி வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்கம் இணைக்கப்பட்ட அகில இந்திய தென்னை வளர்ப்போர் சம்மேளனத்தின் முதல் மாநாடு ஆந்திர மாநிலம், காக்கிநாடாவில் அண்மையில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் உரி தேங்காய் கிலோ ரூ. 20 எனவும், கொப்பரை கிலோ ரூ. 70 எனவும் அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

தென்னை சார்ந்த உப பொருள்களின் இறக்குமதிக்கு கூடுதல் வரி விதிக்க வேண்டும். எல்லா மாவட்டங்களிலும் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். தென்னை சார்ந்த துணைப் பொருள்களை தயாரிக்க புதிய நவீன கருவிகளை மானியத்துடன் வங்கிக் கடன் வசதியுடன் வழங்க வேண்டும்.

மேலும், தென்னை சாகுபடிக்கு கட்டணமில்லா மின்சாரம் தொடர வேண்டும் என்பன உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து, கடந்த ஒரு மாதமாக தமிழகம் முழுவதும் 25,000 விவசாயிகளிடம் கையெழுத்து பெற்று, தில்லியில் பிரதமரை நேரில் சந்தித்து அதை வழங்கி, வலியுறுத்தவும், ஆகஸ்ட் 29, 30 தேதிகளில் தில்லியில் நடைபெறும் கண்காட்சி, கருத்தரங்கில் பங்கேற்கவும், தமிழகத்தின் 20 மாவட்டங்களிலிருந்து 76 விவசாயிகள் தில்லிக்குச் சென்றனர் என்றார் அவர்.

**பார்த்தீனிய செடிகளை அழிக்கும் பணி தொடக்கம்**

First Published : 29 Aug 2011 11:10:43 AM IST

புதுக்கோட்டை, ஆக. 28: புதுக்கோட்டையில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பார்த்தீனியம் களைச் செடிகள் ஒழிப்பு இயக்கம் சனிக்கிழமை தொடங்கியது.

தமிழக அரசின் அறிவிப்பின்படி, புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே பெரியார் நகர் செல்லும் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பார்த்தீனியச் செடிகளை ரசாயன மருந்தின் மூலம் அழிக்கும் இயக்கத்தை மாவட்ட ஆட்சியர் ப. மகேஸ்வரி தொடக்கி வைத்து, பார்த்தீனியம் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களையும் பொதுமக்களிடம் விநியோகித்தார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியரகத்தில் இவ்வியக்கம் தொடர்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்துக்கு தலைமை வகித்து, மாவட்ட ஆட்சியர் பேசியது:

பார்த்தீனியச் செடி நச்சுத் தன்மை வாய்ந்தது. இதனால், மனிதனுக்கு தோல் அரிப்பு, தேமல், ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந்தச் செடிகளை உண்பதால் கால்நடைகளும் பாதிக்கப்படுகின்றன.

எனவே, இந்தச் செடியைக் கட்டுப்படுத்த, அவை முளைத்து வரும் போதே கையுறை அணிந்து பிடுங்கி அழிக்கலாம்.

மேலும், பார்த்தீனியத்தின் விதைகள் முதிர்ச்சி அடையும் முன்னதாகவே முளைக்கக்கூடிய திறனுடையதால், பூப்பதற்கு முன் அவற்றை அழிக்கலாம். மாவட்டம் முழுவதும் இந்தச் செடிகளை அழிக்கும் பணி முழு வீச்சில் மேற்கொள்ளப்படும் என்றார் ஆட்சியர்

இதில், ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கோ. ராதா, வேளாண் இணை இயக்குநர் தி. தங்கவேல், மாநில திட்ட வேளாண் துணை இயக்குநர் கே. பாலன், மகளிர் திட்ட அலுவலர் வீ. திருவரங்கம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் எம். ஜயச்சந்திரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (பொது) சி. சொக்கன், (வேளாண்மை) பி. ராஜு, (வளர்ச்சி) மு. முனியாண்டி, கோட்டாட்சியர் சி. முத்துமாரி, ஊராட்சிகள் உதவி இயக்குநர் பி. காஞ்சனா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஆலங்குளத்தில் தக்காளி, வெண்டை விலை சரிவு**

First Published : 29 Aug 2011 10:25:24 AM IST

ஆலங்குளம்,ஆக.28: ஆலங்குளத்தில் தக்காளி, வெண்டைக்காய் விலை கடுமையாக சரிந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலங்குளம் காய்கனிச் சந்தைக்கு சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து காய்கனிகள் விற்பனைக்கு வரும். இதில் அண்மைக்காலமாக தக்காளி, வெண்டைக்காய் ஆகியவை வரத்து அதிகமாக உள்ளது. இதனால், ஞாயிற்றுக்கிழமை கிலோ தக்காளி ரூ. 2.50-க்கும், வெண்டைக்காய் ரூ. 3-க்கும் விற்கப்பட்டன. விலை மேலும் குறைய வாய்ப்புள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

விலை தொடர்ந்து சரிந்து வருவதால், இப் பகுதி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

தினமலர்

**சென்ற ஏப்ரல் - மே மாத காலத்தில் முக்கிய பொருள்கள் இறக்குமதி25 சதவீதம் உயர்வு**

ஆகஸ்ட் 30,2011,00:23

புதுடில்லி: நடப்பாண்டு ஏப்ரல்-மே மாத காலத்தில், நாட்டின் முக்கிய பொருள்கள் இறக்குமதி, 24.7 சதவீதம் அதிகரித்து, 12 ஆயிரத்து 532 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.



இது, கடந்த ஆண்டு இதே காலத்தில், 10 ஆயிரத்து 51 கோடி ரூபாயாக இருந்தது.இதே காலத்தில், பருப்பு வகைகள் இறக்குமதி, 38.6 சதவீதம் உயர்ந்து, 1,196.38 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில், 862.94 கோடி ரூபாயாக இருந்தது என மத்திய வர்த்தக அமைச்சகத்தின் உயரதிகாரி தெரிவித்தார்.முக்கிய பொருள்கள் வரிசையில், உணவு தானியங்கள், மோட்டார் வாகனங்கள், பால் மற்றும் குளிர் பானங்கள் ஆகியவை இடம்பெறுகின்றன. முக்கிய பொருள்கள் இறக்குமதி அதிகரிக்கும் நிலையில், அது உள்நாட்டு தொழில்துறையை பாதிக்கும் என்பதால் மத்திய அரசு இவற்றின் இறக்குமதியை மிகவும் உன்னிப்பாக கவனித்து

வருகிறது.மேற்கண்ட இரண்டு மாதங்களில், சமையல் எண்ணெய் இறக்குமதி, 38.7 சதவீதம் அதிகரித்து, அதாவது, 3,789.66 கோடியிலிருந்து, 5,255.66 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. சர்வதேச அளவில், சமையல் எண்ணெய் பயன்பாடு மற்றும் இறக்குமதியில், இந்தியா முக்கிய இடம் வகிக்கிறது. மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியில், கச்சா பாமாயிலின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது.இதே இரண்டு மாதங்களில், ஆல்கஹால் கலந்த பானங்கள் மற்றும் நறுமணப் பொருள்கள் இறக்குமதி முறையே, 60.4 சதவீதம் மற்றும் 30.5 சதவீதம் என்ற அளவில் உயர்ந்திருந்தது.மேற்கண்டவை தவிர, சிறிய தொழிற்பிரிவுகளில் தயாரிக்கப்படும் குடைகள், பூட்டுகள், விளையாட்டு பொம்மைகள், கண்ணாடி சாமான்கள் போன்றவற்றின் இறக்குமதி, 46.2 சதவீதம் உயர்ந்து, 292.80 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. மோட்டார் வாகனங்கள் இறக்குமதி, 112.7 சதவீதம் உயர்ந்து, அதாவது, 308.78 கோடியிலிருந்து, 656.68 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.உணவு தானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள், தேயிலை மற்றும் காபி போன்றவற்றின் இறக்குமதி, முறையே 81.3 சதவீதம், 1.9 சதவீதம் மற்றும் 42.6 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது.அதேசமயம், பால் பொருள்கள் இறக்குமதி, 70.3 சதவீதம் குறைந்து, 205.52 கோடியிலிருந்து, 61 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.நாட்டின் மொத்த இறக்குமதியில், முக்கிய பொருள்களின் இறக்குமதி, 4 சதவீதம் என்ற அளவில் உள்ளது.கடந்த ஏப்ரல்-மே மாத காலத்தில், நாட்டின் ஒட்டு மொத்த இறக்குமதி, 31.93 சதவீதம் அதிகரித்து, 2 லட்சத்து 49

ஆயிரத்து 653 கோடியிலிருந்து, 3 லட்சத்து 29 ஆயிரத்து 377 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.இந்தோனேஷியா, சீனா, மலேசியா, ஜெர்மனி, உக்ரைன், அர்ஜென்டினா, கனடா, ஜப்பான், தாய்லாந்து, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, எகிப்து மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படும் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதி உயர்ந்துள்ளது. அதேசமயம், அமெரிக்கா, கொரியா, மியான்மர் ஆகிய நாடுகளில் இருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதி குறைந்துள்ளது.

**பயிர்களுக்கு ஏற்றஉரங்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,01:58 IST

வடமதுரை:மண் பரிசோதனையின் அடிப்படையில் பயிர்களுக்கு ஏற்ற உரங்கள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. விவசாயிகள் அதிகளவு உரமிட்டால் அதிக மகசூல் கிடைக்கும் என நினைக்கும் போக்கு காணப்படுகிறது.தில் கூடுதல் செலவு ஏற்பட்டு, லாபத்தை பாதித்து, உரங்களும் வீணாகிறது. இதனால் இந்தாண்டு விவசாயிகளிடம் மண் பரிசோதனை செய்ய அரசு வலியுறுத்தி வருகிறது. ஒரு மண் மாதிரி பரிசோதனைக்கு 20 ரூபாய் வீதம் செலுத்த வேண்டும். மண்பரிசோதனை விவசாயிகள் புகைப்படம், புள்ளி விபரங்களுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் சாகுபடி பயிர்களுக்கு ஏற்றாற்போல உரங்களை பெற அனுமதி வழங்கிட அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பணியில் உதவி வேளாண் அலுவலர்கள் ஈடுபட்டுள்ளனர். ஆர்வமுள்ள விவசாயிகள் சம்மந்தப்பட்ட வேளாண்மை அலுவலகத்தில் மண் மாதிரிகள் தந்து அடையாள அட்டை பெற்று பயனடையலாம் என வேளாண்மைத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**மானிய விலையில் மா, நெல்லி கன்றுகள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,01:57 IST

வேடசந்தூர்:வேடசந்தூர் வட்டாரத்தில் தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் மூலம் மானிய விலையில் மா,நெல்லி கன்றுகள் வழங்கப்படவுள்ளன.தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சிவசாமி கூறியதாவது: மா அடர் நடவு, மா இயல்பான பரப்பு அடைதல், நெல்லி புதிய தோட்டம் அமைத்தல் திட்டத்தின் கீழ், 50 முதல் 75 சதவீத மானியத்தில் மா, நெல்லி கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.தேவைப்படும் விவசாயிகள் சிட்டா, அடங்கல்,

புகைப்படம்,ரேஷன் கார்டு நகலுடன் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தைதொடர்பு கொண்டு பயன் அடையலாம், என்றார்.

**கரும்பு டன்னுக்கு ரூ.3 ஆயிரம்விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,01:01 IST

தேனி:ஒரு டன் கரும்புக்கு 3 ஆயிரம் ரூபாய் விலை வழங்க வேண்டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது.தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக்குழு கூட்டம் மாநில துணைத்தலைவர் முகமதுஅலி தலைமையில் நடந்தது. தேனி மாவட்ட செயலாளர் சுருளிநாதன் வரவேற்றார். லாசர் எம்.எல்.ஏ., அகில இந்திய பொதுச் செயலாளர் வரதராஜன், மாநில பொதுச் செயலாளர் சண்முகம், மாநில பொருளாளர் நாகப்பன், உட்பட பலர் பங்கேற்றனர்.வீடு இல்லாத அனைவருக்கும் வீட்டு மனை பட்டா வழங்க வேண்டும் என வலியுறுத்தி செப்., 19ம் தேதி மாநிலம் முழுவதும் தாலுகா அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது, கரும்பு டன்னுக்கு 3000ம் ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நான்கு வழிச்சாலை விவசாயிகளை பாதிக்காத வகையில் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட தலைவர் கண்ணன் நன்றி கூறினார்.

**முந்திரி மரங்களில் "அண்டிமா' தாக்குதல் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,00:04 IST

திருநெல்வேலி : நெல்லை மாவட்டத்தில் முந்திரி மரங்களில் பரவி வரும் "அண்டிமா' எனப்படும் தண்டு மற்றும் வேர்த் துளைப்பாளின் தாக்குதலை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன் கூறும் போது, ""மாவட்டத்தில் 5 ஆயிரம் எக்டேர் பரப்பில் பரவலாக முந்திரி பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இப்பயிரில் தேயிலை கொசு, தண்டு மற்றும் வேர் துளைப்பான், இலை குடையும் புழு, நுனி மற்றும் பூங்கொத்து புழு, தளிர் மற்றும் பூ பிணைக்கும் புழு உட்பட பல்வேறு பூச்சிகள் தாக்குகின்றன. மாவட்டத்தில் தற்போது முந்திரி பயிர்களில் தண்டு மற்றும் வேர்த் துளைப்பான் எனப்படும் பூச்சியின் தாக்குதல் அதகிமாக காணப்படுகின்றன. இதனால் முந்திரி மரங்களின் மரக் கிளைகள் மஞ்சள் பழுப்பு நிறமாக மாறி இலைகள் மற்றும் கிளைகள் காய்ந்து ஒவ்வொன்றாக கீழே விழுவதுடன் மரம் பட்டு விடும் வாய்ப்புகள் உள்ளது' என்றார்.
இப்பூச்சியின் தாக்குதலை தடுக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மேலநீலிதநல்லூர்

தோட்டக் கலை உதவி இயக்குனர் ராஜா முகம்மது கூறியதாவது: முந்திரியை தாக்கும் பூச்சிகளில் தண்டு மற்றும் வேர்த் துளைப்பானை மரம் கொல்லி பூச்சியாகும். இந்நோயை கட்டுப்படுத்தாவிட்டால் மரம் நாளடைவில் அழிந்து விழும். ஆண்டு முழுவதும் இதன் தாக்குதல் இருந்தாலும் குறிப்பாக மே முதல் செப்டம்பர் வரை அதிக அளவில் காணப்படும். இப்பூச்சி தாக்குதலில் இரந்து பாதுகாக்க முந்திரி தோப்பை நன்கு பராமரித்து சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு மரத்தையும் சுற்றியுள்ள சருகுகள், புற்களை அடிக்கடி அகற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட மரங்களை அகற்ற வேண்டும். தாக்குதல் தென்பட்டவுடன் வேர்கள் மற்றும் தண்டுகளில் உள்ள புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். மரத்தின் அடிப்பகுதியில் இருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு ஒரு பங்கு தார் மற்றும் 2 பங்கு மண்ணெண்ணெய் கலந்து பூச வேண்டும். மரத்தை சுற்றி கார்பரில் 0.2 சதவீத மருந்தை தண்ணீரில் கலந்து ஊற்ற வேண்டும். வேரை நுனியில் சீவி விட்டு பின் மானோகுரோட்டோபாஸ் 20 மி.லி மருந்தை 20 மி.லி தண்ணீருடன் சிறிய அளவுள்ள பாலித்தீன் பைகளில் கலந்த சீவப்பட்ட வேரை மருந்து கலவையில் மூழ்குமாறு செய்து இறுகி கட்ட வேண்டும். ஐந்து முதல் 7 செ.மீ நீள அகலத்திற்கு முந்திரி பட்டையை எடுத்து பின்பு மானோகுரோட்டோபாஸ் 10 மி.லி மருந்தை பஞ்சில் நனைத்து பட்டை எடுக்கப்பட்ட பகுதியில் வைத்து ஏற்கனவே தனியாக எடுக்கப்பட்ட பட்டையை வைத்து களி மண்ணால் அடைத்து விட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பண்டிகை சீஸன் துவங்குவதால் கொண்டக்கடலை விலை கிடுகிடு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 30,2011,01:05 IST

சேலம்: விநாயகர் சதுர்த்தியை தொடர்ந்து நவராத்திரி, சரஸ்வதி பூஜை, விஜயதசமி ஆகிய பண்டிகைகள் வருவதால், நேற்று ஒரே நாளில், கொண்டக்கடலை விலை கிலோவுக்கு, 10 ரூபாய் உயர்வு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் விநாயகர் சதுர்த்தி பண்டிகையின் நைவேத்யமாக கொலுக்கட்டை மற்றும் சுண்டல் படைக்கப்படும். செப்டம்பர் 1ம் தேதி விநாயகர் சதுர்த்தியும், 29ம் தேதி நவராத்திரி துவங்குகிறது. அதையடுத்து சரஸ்வதி பூஜை, விஜயதசமி என தொடர்ந்து பண்டிகைகள் வருவதால், கடந்த ஒரு வாரமாக கொண்டக் கடலை விற்பனை சூடுபிடித்துள்ளது.

தற்போது, மார்க்கெட்டில் கொண்டக் கடலையின் விலை கிலோவுக்கு, 10 ரூபாய் அதிகரித்துள்ளது. கடந்த வாரம் வரை மொத்த விலையில் குவிண்டால், 9,200 ரூபாய்க்கு விற்ற வெள்ளை கொண்டக் கடலை, 10 ஆயிரம் ரூபாயாகவும், 3,800 ரூபாய்க்கு விற்ற சிகப்பு கொண்டக் கடலை, 4,800 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. மொத்த விலையில் உயர்வு ஏற்பட்டதை அடுத்து, சில்லரை விலையில் கிலோ 94 ரூபாய்க்கு விற்ற வெள்ளை கொண்டக் கடலை, 10

ரூபாய் அதிகரித்து, 104 ரூபாய்க்கும், 40 ரூபாய்க்கு விற்ற சிகப்பு கொண்டை கடலை கிலோ 50 ரூபாய்க்கும் விற்கிறது. மார்க்கெட்டுக்கு வரத்து குறைந்துள்ளதால், விலை மேலும் அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து சேலம் செவ்வாய்ப்பேட்டையை சேர்ந்த கொண்டக் கடலை வியாபாரி சீனிவாசன் கூறியதாவது: தமிழகத்தின் கொண்டக் கடலை தேவையை விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தர்மபுரி, விழுப்புரம், சிவகங்கை, மதுரை மாவட்டங்களே நிறைவு செய்கின்றன. நடப்பாண்டில் இங்கு எதிர்பார்த்த விளைச்சல் இல்லை.
அத்துடன் ஆந்திர, கர்நாடகா, மஹாராஷ்டிரா மாநிலங்களில் இருந்து தமிழகத்துக்கு கொண்டக் கடலையின் வரத்து எதிர்பார்த்த அளவு இல்லை. இதன் காரணமாக, கொண்டக் கடலையின் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் மட்டுமின்றி வடமாநிலங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படும் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, சரஸ்வதி பூஜை காரணமாக, தட்டுப்பாடு நிலவுகிறது. தட்டுப்பாட்டை சாதகமாக பயன் படுத்தி பெரிய வியாபாரிகள், அதிக அளவில் கொண்டக் கடலையை இருப்பு வைக்க துவங்கி விட்டனர். இதனால், மார்க்கெட்டுக்கு கொண்டக் கடலை வரத்து பாதியாக குறைந்து விலையில் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வரையும், கிலோவுக்கு 10 ரூபாய் வரையும் உயர்வு ஏற்பட்டுள்ளது. இந்த உயர்வு மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**தோட்டக்கலை துறை மூலம் 20 லட்சம் மாங்கன்று வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,23:21 IST

காரைக்குடி:நேமம் அரசு தோட்டக்கலை பண்ணையில் இந்த ஆண்டு 20 லட்சம் "அல்போன்சா' மாங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட உள்ளதாக, தோட்டக்கலை அலுவலர் தியாகராஜன் தெரிவித்தார்.அவர் கூறுகையில்,"" நேமம் அரசு தோட்டக்கலை பண்ணையில், வறட்சிக்கு இலக்காகும் திட்டத்தில் உயர் ரக தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்கி றோம். இம்மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், கோவை விவசாய பல்கலையில் கண்டுபிடித்த, மா, கொய்யா, சப்போட்டா, நெல்லி, முந்திரி, மாதுளை ஆகிய மரக்கன்றுகளும், மல்லிகை, செம்பருத்தி, குரோட்டன்ஸ் போன்ற அழகு செடிகளும், தேக்கு, சவுக்கு, யூக்கலிப்டஸ், வேம்பு, புங்கன் போன்ற மரக்கன்றுகள் விற்கப்படுகிறது.இதுதவிர, நடப்பாண்டு 20 லட்ச "அல்போன்சா' ரக மாங்கொட்டைகளை பண்ணையில் விதைத்துள்ளோம். அதில் இருந்து, 4 லட்சம் "மா வேர்' செடிகள் எடுக்கப்பட்டு, அதனை மா மென்தண்டு ஒட்டு கட்டப்பட்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் மா ஒட்டு செடிகள் விநியோகிக்க தயார் நிலையில் வைத்துள்ளோம்," என்றார்.

**நீர் வள மேம்பாடு குறித்த தேசிய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,23:42 IST

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த நல்லானூர் ஜெயம் இன்ஜினியரிங் கல்லூரியில் மத்திய அரசின் புவி அறிவியல் துறை சார்பில் தேசிய நீர் வள மேம்பாடு குறித்த புவி அமைப்பு பொறியியல் துறை சார்பில் தொடு உணர்வு மற்றும் புவியியல் தகவல் பரிமற்ற முறைகள் பயன்பாடு என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கு நடந்தது. கருத்தரங்கு நிறைவு விழாவுக்கு, கல்லூரி முதல்வர் தொல்காப்பிய அரசு தலைமை வகித்தார். இயக்குனர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். கட்டிடவியல் துறை தலைவர் செந்தில்குமார் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக ஹைதராபாத் இந்திய விண்வெளி ஆராய்ச்சி கழக விஞ்ஞானி சுப்பிரமணியன் பேசியதாவது: நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்கவும், நிலையாக வைத்திருக்கவும், தொடு உணர்வு மற்றும் புவியியல் தகவல் பரிமாற்ற முறை உதவுகிறது. வரை படம் தயாரித்து அதன் வாயிலாக நிலத்தடி நீரின் அளவை 83 சதவீதத்தில் இருந்து 95 சதவீதமாக அதிகரிக்க முடியும். ராஜிவ் தேசிய குடிநீர் திட்டம் வாயிலாக இத்திட்டத்தின் செயல்படுவதற்கான உதவியை பெறலாம். இந்த தொழில் நுட்பம் வாயிலாக நிலத்தடி நீர் மட்டத்தினை அதிகரிக்க மட்டுமில்லாமல் வன வளம், நீர் வளம், மண் வளம், கடல் நீர் வளம் ஆகிய வளங்களையும் வேளாண் துறை வளத்தை மேம்படுத்தலாம்.

சமீபத்தில் நடந்த ஆய்வில் இந்த தொழில் நுட்பத்தை நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் குறிப்பாக பாலைவனம் முதல் மலைப்பிரதேசங்கள் வரையிலும் கடற்கரையில் இருந்து சமவெளிகள் வரையிலும் மற்ற பகுதிகளிலும் பயன்படுத்தலாம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார். புவி அமைப்பியல் விரிவுரையாளர் கருணாநிதி நன்றி கூறினார்.

**நீர் பாசன திட்டத்துக்கு முக்கியத்துவம் உயர் கல்வித்துறை அமைச்சர் உறுதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 29,2011,23:42 IST

தர்மபுரி: ""நீர் பாசன திட்டத்துக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்,'' என உயர் கல்வித்துறை அமைச்சர் பழனியப்பன் தெரிவித்தார். மொரப்பூர் ஒன்றியத்தில் நல்லகுட்டஹள்ளி, கொட்டாவூர், அஸ்திகிரி, தானனூர், முத்தனூர், புதுரெட்டியூர், மைலாப்பூர், கெடகரஹள்ளி, திட்லானூர், தேக்கநாயக்கன்பட்டி ஆகிய ஊர்களில் மக்களை அமைச்சர் பழனியப்பன் சந்தித்து குறைகளை

கேட்டறிந்தார். பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்ட அமைச்சர் பழனியப்பன் பேசியதாவது:

தேர்தலில் அறிவித்தபடி ரேஷன் கடைகளில் 20 கிலோ இலவச அரிசியை முதல்வர் ஜெயலலிதா சொன்னபடி வழங்கி வருகிறார். ஏழை மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது தான் முதல்வர் ஜெயலலிதா அரசின் நோக்கம்.
இந்தாண்டு மாணவர்களுக்கு இரண்டு செட் உடையும், அடுத்தாண்டு முதல் நான்கு செட் உடையும் வழங்கப்படும். மாணவர்கள் கல்வியை பாதியில் நிறுத்தாத வகையில் மாணவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

ஆண்களுக்கு சமமாக பெண்களும் கல்வியில் உயர வேண்டும். தர்மபுரி மாமவட்டத்தில் இரு கல்லூரிகளும், தொழில் கூடங்கள், சிப்காட், ஃபுட்பார்க் போன்றவை அமைய அனுமதியை முதல்வர் அளித்துள்ளார். அண்ணாதுரை பிறந்த நாளான செப்டம்பர் 15ம் தேதி இலவச மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி ஆகியவை வழங்கப்படும். ஒன்றரை ஆண்டில் ரேஷனுன் கார்டு உள்ள அனைவருக்கும் வழங்கப்படும்.

கடந்த ஆட்சியில் இருந்த மின் தட்டுப்பாடு போக்க பல்வேறு திட்டங்கள் திட்டப்பட்டு வருகிறது. பொதியம்பள்ளம் அணைக்கட்டு திட்டத்தை பெரிதாக மாற்றி நீர் பாசனத்துக்கு பயன்படுத்த கோரிக்கை மனு கொடுத்துள்ளீர்கள். ற்கனவே எம்.எல்.ஏ.,வாக இருந்த போது தொகுதி நிதியில் இருந்து 2 கோடி அணைக்கட்டு சீரமைத்தேன். தற்போது, அதை விரிவுப்படுத்தி 17 ஏரிகள் பயன்படும் வகையில் அதை பெரிய திட்டமாக உருவாக்க நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறு அவர் பேசினார். பாப்பிரெட்டிப்பட்டி தாசில்தார் பழனிசாமி, மொரப்பூர் பி.டி.ஓ., கிருஷ்ணகுமார், ஒன்றிய செயலாளர்கள் குமார், பெரிசாமி, ராஜேந்திரன், தொகுதி செயலாளர்கள் செல்வம் (பாப்பிரெட்டிப்பட்டி), பார்த்திபன் (அரூர்) உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## ஏப்ரல் – ஜூலை மாத காலத்தில் நறுமண பொருள்கள் ஏற்றுமதி 22% உயர்வு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் (ஏப்ரல்–ஜூலை) ஏலக்காய், மிளகாய், இஞ்சி, வெந்தயம் உள்ளிட்ட நறுமண பொருள்கள் ஏற்றுமதி சென்ற நிதி ஆண்டின் இதே மாதங்களைக் காட்டிலும் மதிப்பின் அடிப்படையில் 22 சதவீதம் அதிகரித்து ரூ.2,135 கோடியிலிருந்து ரூ2,613.50 கோடியாக உயர்ந்துள்ளது.

அதேசமயம் அளவின் அடிப்படையில் 24 சதவீதம் சரிவடைந்து 2,08,775 டன்னிலிருந்து 1,57,725 டன்னாக குறைந்துள்ளது. இது இந்திய நறுமண பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது. குறிப்பாக மிளகு, இஞ்சிக்கான ஏற்றுமதி விலை முறையே 56 சதவீதம் மற்றும் 70 சதவீதம் உயர்ந்துள்ளது.

நடப்பு 2011–12–ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.6,500 கோடி மதிப்பிற்கு 5 லட்சம் டன் நறுமண பொருள்கள் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் நான்கு மாதங்களில் ரூபாய் மதிப்பு அடிப்படையில் 33 சதவீதமும், அளவின் அடிப்படையில் 31 சதவீதமும் ஏற்றுமதியாகியுள்ளது.

எனவே நடப்பு நிதி ஆண்டிற்கான ஏற்றுமதி இலக்கை அடைய முடியும் என வர்த்தக நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

**கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் உணவு தானியங்கள் வீணாவது 0.07 சதவீதமாக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நாட்டில் சேமிப்பு கிடங்கு வசதிகள் போதுமான அளவிற்கு இல்லாததால், கோதுமை போன்ற உணவு தானியங்கள் அதிக அளவில் வீணாவதாக புகார் கூறப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், மொத்த உணவு தானியங்கள் உற்பத்தியில் 0.07 சதவீதம் மட்டுமே வீணாகியுள்ளதாக மத்திய நுகர்வோர் நலன் மற்றும் உணவு அமைச்சர் கே.வி.தாமஸ் நாடாளுமன்றத்தின் மேலவையில் தெரிவித்தார். கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இது 2.5 சதவீதமாக இருந்தது.

உற்பத்தி

கடந்த 2005–06–ஆம் நிதி ஆண்டில் உற்பத்தியான உணவு தானியங்களில் 95,075 டன் உணவு தானியங்கள் வீணாகியுள்ளன. இது, கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில் 6,346 டன்னாக குறைந்துள்ளது. அந்த நிதி ஆண்டில், நாட்டின் உணவு தானியங்கள் உற்பத்தி 24.10 கோடி டன்னாக விக்கத்தக்க வகையில் அதிகரித்து இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது வீணான உணவு தானியங்கள் அளவு 0.07 சதவீதமாகத்தான் உள்ளது.

போதுமான கிடங்கு வசதி இல்லாததால், கொள்முதல் செய்யும் உணவு பொருள்களை சேமித்து வைப்பது ஒரு சவாலாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இந்திய உணவு கழகத்தின் கிடங்குகளில் 10 லட்சம் டன் உணவு தானியங்கள் வீணாகியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சேமிப்பு கிடங்கு வசதி

இந்நிலையில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் சேமிப்பு கிடங்கு வசதியை மேலும் 15 சதவீதம் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது. திறந்த வெளியில் உணவு தானியங்கள் இருப்பு வைப்பதை தவிர்க்க, பொது மற்றும் தனியார் கூட்டு அடிப்படையில் கிடங்குகளை நவீனபடுத்த மத்திய அரசு ஏற்கனவே நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

*இதன்படி, தனியார் நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில சேமிப்பு கிடங்கு கழகங்கள் வாயிலாக 19 மாநிலங்களில் 1.53 கோடி டன் உணவு தானியங்களை சேமிக்கும் வகையில் சேமிப்பு கிடங்குகளை அமைக்க திட்டமிட்டுள்ளதாக கே.வி.தாமஸ் மேலும் தெரிவித்தார்.*

தினகரன்

# தானியங்கள் இறக்குமதி 26% சரிந்தது

பதிவு செய்த நாள் : 8/30/2011 1:10:6



புதுடெல்லி : அவரை, மொச்சை போன்ற தானிய வகைகளின் இறக்குமதி கடந்த நிதி ஆண்டான 2010&11ல் 26 சதவீதம் சரிந்ததாக மத்திய உணவுத் துறை அமைச்சர் தாமஸ் தெரிவித்தார். மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது எழுத்து மூலம் அவர் அளித்த பதிலில் ‘‘கடந்த நிதி ஆண்டில் அவரை, மொச்சை போன்ற தானிய வகைகளின் இறக்குமதி 26 லட்சம் டன். இதுபோன்ற தானியங்களின் உள்நாட்டு உற்பத்தி 2010&11ம் நிதி ஆண்டில் 1.80 கோடி டன்னாக அதிகரித்தது. எனவே, இறக்குமதி குறைந்தது’’ என்றார்.